**BRAMPTON** Service and Information Update

# கோவிட் -19 (COVID-19) தொற்று பரவுதலுக்கு எதிர் நடவடிக்கையாக ப்ராம்ப்ட்டன் நகர அரங்கம் மற்றும் இதர வசதியமைப்புக்கள் மூடப்படுவதன் காலம் நீட்டிக்கப்படுகிறது

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 27, 2020) – கோவிட் -19 (COVID-19) தொற்று பரவுதலை முன்கூட்டியே தடுப்பதில் உதவுவதற்காக, நமது குடியிருப்பு வாசிகளின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை மனதில் வைத்து, பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) இன் வழிகாட்டுதலின் பேரில் நகரின் அரங்கம் மற்றும் ப்ராம்ப்ட்டன் நகரின் பிற அனைத்து வசதியமைப்புக்களும் அடுத்த அறிவிப்பு வரும் வரை மூடப்பட்டே இருக்கும்.

**நகரின் வசதியமைப்புக்கள் மூடப்படுதல்**

நகர அரங்கம், பொழுதுபோக்கு மற்றும் சமுதாயக் கூடங்கள் மற்றும் ப்ராம்ப்ட்டன் நகரின் நூலக கிளைகள் ஆகிய அனைத்து வசதியமைப்புக்களும், அடுத்த அறிவிப்பு வரும் வரை மூடப்பட்டே இருக்கும்.

நகரின் அரங்க நுழைவாயில் (எலிவேட்டருக்கு அருகில் பார்க்கிங் டிக்கெட் வழங்கும் எந்திரம் மற்றும் காசோலை இட்டுச்செல்ல வேண்டிய பெட்டி) திறந்தபடியே இருக்கும் மற்றும் கண்காணிப்பில் இருந்தபடி இருக்கும்.

**நகர நிர்வாகத்தினர் நடத்தும் நிகழ்ச்சிகள்**

நகர நிர்வாகத்தினரால் நடத்தப்படும் நிகழ்ச்சிகள் அனைத்தும் அடுத்த அறிவிப்பு வரும் வரை ரத்து செய்யப்பட்டுள்ளன. நகரின் இந்த வசதியமைப்புக்களில் நிகழ்த்தப்படவிருந்த அனைத்து நிகழ்ச்சிகளும் அடுத்த அறிவிப்பு வரும் வரை ரத்து செய்யப்பட்டுள்ளன.

**பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை திட்டமிடல்**

பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் அனைத்தும், மற்றும் அவற்றுக்கான இடங்களை வாடகைக்கு விடுதல் ஆகியவை, அடுத்த அறிவிப்பு வரும் வரை ரத்து செய்யப்பட்டுள்ளன. இதற்காக கட்டிய பணம் அவரவர் கணக்கில் தன்னியக்கமாகவே வரவு வைக்கப்படும். மேலும் தகவல்களுக்கு recconnects@brampton.ca இல் தொடர்பு கொள்ளவும்.

**ரோஸ் ப்ராம்ப்ட்டன்**

ப்ராம்ப்ட்டன் நகர கலை கலாச்சார நிகழ்ச்சிகள் நடக்கும் இடங்களில், அனைத்து நிகழ்வுகளும் ரத்து செய்யப்பட்டன அல்லது தேதி தள்ளி வைக்கப்பட்டன. கூடுதலாக, மே மாதத்தில் நடபெற வேண்டிய நிகழ்ச்சிகள் உள்ளிட்ட **தி ரோஸ் வழங்கும் 2019-2020 பருவம்** (*The Rose Presents 2019-2020 season),* என்னும் நிகழ்ச்சித்தொகுப்பின் மீதமுள்ள நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்பட்டன அல்லது தேதி தள்ளி வைக்கப்பட்டன. கலை நிகழ்ச்சிகள் நடத்தும் இடங்களும் அடுத்த அறிவிப்பு வரும் வரை மூடப்படுகின்றன.

மேலும் தகவல்களுக்கு, வருகை புரியவும்: www.therosebrampton.ca அல்லது பாக்ஸ் ஆஃபீஸை boxoffice@brampton.ca எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்

**மிக முக்கியமான சேவைகள்**

தீயணைப்பு மற்றும் அவசர கால சேவைகள், ப்ராம்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவைகள், போக்குவரத்து ஒழுங்குபடுத்தல் சேவைகள், சட்டம் ஒழுங்கு அமலாக்கம், சாலைப் பராமரிப்பு பணிகள், POA நீதிமன்றங்கள், மற்றும் பாதுகாப்பு சேவைகள் ஆகிய அனைத்து முக்கிய சேவைகளும் நமது சமுதாய மக்களுக்கு ஆதரவளிப்பதற்காக தொடர்ந்து கடமையாற்றும்.

ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தின் விலங்குகள் காப்பகம் பொது மக்கள் பார்வைக்கு மூடப்பட்டுவிட்டது; வளர்ப்புக்காக தத்து எடுத்தல் மற்றும் மீட்டுச்செல்லுதல் ஆகியவை முன்பதிந்த சந்திப்பின் பேரில் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

நீதிமன்ற நிர்வாகத்தில் இருக்கும் மேற்பார்வையாளர்கள் ஒவ்வொரு நாளும் சில குறிப்பிட்ட மணி நேரம் மட்டுமே அலுவலகத்தில் இருந்தபடி சட்டப்படியான கால அவகாசத்தின்படி, அமலாக்க துறையினரிடமிருந்து மட்டுமே, வழக்கு பதிவு செய்தலை மேற்கொள்வார்கள். வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை விட்டுச்செல்வதற்காக, பிரதான நுழைவாயிலில் ஒரு பெட்டி வைக்கப்பட்டுள்ளது. அவசியம் ஏற்பட்டால் பொதுமக்களும் தங்கள் வழக்கு ஆவணங்களை விட்டுச்செல்ல இதை உபயோகிக்கலாம்.

நமது பணியாளர்கள் மற்றும் குடியிருப்பு வாசிகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்காக, நகரின் பேருந்துகள், பேருந்து சம்பந்தப்பட்ட கட்டிடங்கள், நிறுத்தங்கள் மற்றும் முனையங்களின் மேற்பரப்புகள், இருக்கைகள் ஆகியவை மிகவும் அடிக்கடி தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றன.

**கோவிட் – 19 (COVID-19) தொற்று பரவலுக்கு எதிர் நடவடிக்கையாக அவசர நிலை**

BRAMPTON

# Service and Information Update

மார்ச் 24, 2020 தேதியன்று, நகர் மன்றக்குழுவின் ஆலோசனையின்பேரிலும் மற்றும் நகரின் அவசரநிலை மேலாண்மைக் குழுவின் பரிந்துரையின் பேரிலும், மேயர் பேட்ரிக் ப்ரவுன் அவர்கள் ப்ராம்ப்ட்டன் நகரில் ஒரு அவசர நிலையைப் பிரகடனம் செய்தார்; இது நகரின் அவசர நிலை மேலாண்மை திட்டத்திற்கு ஏற்ப செய்யப்பட்டது. இந்தப் பிரகடமானது, கோவிட் -19 (COVID-19) தொற்றுப்பரவலின் தாக்கத்தை முன்கூட்டியே தடுப்பதில் உதவுவதற்காக, மிகவும் வளைந்துகொடுக்கும் தன்மை மற்றும் விரைவான தன்மையை அனுமதிப்பதன் மூலம், நகரின் நடப்பிலிருக்கும் அவசரநிலைக்கு உகந்த நடவடிக்கைகளுக்கான முயற்சிகளுக்கு இந்த பிரகடனம் உதவும்.

ப்ராம்ப்ட்டன் நகரமானது, கோவிட்-19 (COVID-19) தொற்றுப்பரவலை சற்று தீவிரமாக எடுத்துக்கொண்டு, பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) இன் அறிவுரைகளை தொடர்ந்து பின்பற்றி வருகிறது. மிக மிக சமீபத்திய தகவல்கள் கிடைக்குமிடம்: at www.peelregion.ca/coronavirus. நகரின் நிர்வாகம் இந்த நிலைமையை தொடர்ந்து கண்காணித்தபடியே இருக்கும் மற்றும் கிடைக்கும் புதிய தகவல்களை அப்போதைக்கப்போதே தெரிவிப்பார்கள். புதிய தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/COVID19.

**ஊடக தொடர்பு**

மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
*905-874-3426 | Monika.Duggal@brampton.ca*